A TO Z INDIA

May 2021 • Volume 04 • Issue 10
English & Tamil Monthly Magazine
Price Rs 65/-



12

MAITHILI SHARAN GUPT

✒ CHANDRA

Indian Culture ● Indian Art ● Indian Lifestyle ● Indian Religion

Watercolor artwork of Amer fort
Jaipur, India.

inside

04

EDITORIAL: LABOUR DAY 2021, SIGNIFICANCE, HISTORY, AND FACTS

May Day or International Workers' Day is commemorated on the first day of May every year. This year, May Day will be observed on Saturday, May 1 to honour the attainments of the working class.

12

INDIAN POET: MAITHILI SHARAN GUPT

Rashtra Kavi and a Padma Bhushan awardee, Maithili Sharan Gupt, was one of India's modern Hindi poets.

16

KNOW MY NAME: SUCHETA KRIPLANI

In 1940, she started the All India Mahila Congress, the women's unit of the INC, which is still active today.

23

குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்புப் பக்கம்

குமரனும் சலவை கழுதையும் பற்றிய ஓர் சித்திர கதை.

32

WATERCOLOUR SPLASH ARTWORK: THE JANTAR MANTAR MONUMENT

A rare watercolour splash hand drawn artwork which portrays the Jantar Mantar Monument in Jaipur, Rajasthan, India.

FROM THE EDITOR

A TO Z INDIA magazine covers the Indian through his art, culture, lifestyle, religion, etc. This magazine gives an insight into the life of Indians from an angle uncovered by others. Turn to find out what it is about and to immerse yourself into an entirely different culture.

Publication Team:
EDITOR: Indira Srivatsa
ASSOCIATE EDITOR: Dwarak
Reporting: Raghavan
Photography: Adithyan
Graphics Engineer: Chandra

Editorial Office:
E 002, Premier Grihalakshmi Apartments,
Elango Nagar South,
Virugambakkam,
Chennai - 600092,
Tamil Nadu, India.

Communication Details:
MOBILE: +91-7550160116
e.mail id: editor.indira@gmail.com

Disclaimer:
A TO Z INDIA Magazine has made a constant care to make sure that content is accurate on the date of publication. The views expressed in the articles reflect the author(s) opinions and do not necessarily are the views of the publisher and editor.

A TO Z INDIA

MAY DAY

Editorial: Labour Day 2021, Significance, History, and Facts

✒ Indira Srivatsa

May Day or International Workers' Day is commemorated on the first day of May every year. This year, May Day will be observed on Saturday, May 1 to honour the attainments of the working class. May Day is also observed as a public holiday in many countries such as Bangladesh, Cuba, China, Germany, etc. Labour Day is also marked as a public holiday in India. It is also known as Antarrashtriya Shramik Diwas (International Labour Day).

》 Significance of International Labour Day/May Day:

The day originated from the labour union

movement, specifically the eight-hour day movement, which supports eight hours for work, eight hours for recreation, and eight hours for rest. May Day has been an important point for demonstrations by various socialist, communist and anarchist groups for long. May Day is an official holiday in countries such as the People's Republic of China, North Korea, Cuba, the former Soviet Union, and many more.

》 History of International Labour Day/May Day:
May Day was first celebrated on May 1st, 1890 with a focus on workers, after it was proclaimed by the first international congress of socialist parties in Europe on July 14th 1889 in Paris, France, to dedicate May 1 every year as the "Workers Day of International Unity and Solidarity."

》 International Labour Day/May Day India:
The first May Day in India was organised in Madras (now Chennai) by the Labour Kisan Party of Hindustan on May 1, 1923.

Indira Srivatsa
Editor - A TO Z INDIA,
editor.indira@gmail.com,
+91-7550160116

கோவலனும் தாமு ஆடும்

✒ குஷால்



கோவலன் இறந்த தன் மூதாதையர் மகிழ்ச்சியடைய ஒரு ஆடை பலி செய்து உணவாக படைக்க நினைத்தான்.

தன்னிடம் வேலை செய்யும் ராமு, சோமுவை அழைத்து, தாமு என்ற ஆட்டை அவர்களிடம் கொடுத்து, தாமுவை குளிக்க வைத்து, கொஞ்சம் தானியங்களை உண்பதற்கு கொடுத்து கூட்டி வரும்படி உத்திரவிட்டான்.

ராமுவும், சோமுவும், தாமு ஆட்டை அருகிலிருந்த நதியில் குளிப்பாட்ட அழைத்து சென்றனர். தாமு தண்ணீரில் செல்லும்போது திடீரென சிரித்தது. ராமுவும் சோமுவும் ஆச்சியமடைந்தனர்.

கோவலனும் தாமு ஆடும்

✒ குஷால்



சிறிது நேரத்தில் தாமு அழ ஆரம்பித்தது. ராமுவும், சோமுவும் அதற்கு தானியங்களை கொடுத்தனர். ஆனால் தாமு அழுது கொண்டே இருந்தது. ராமுவும், சோமுவும் மிகவும் வருத்தமடைந்தனர்.

சிறிது நேரத்தில் தாமு ஆடு சாந்தமாகியது. ராமுவும், சோமுவும், "தாமு ஏன் நீ சிரித்தாய்? பிறகு திடீரென அழுதாய்?" எனக் கேட்டனர்.



கோவலனும் தாமு ஆடும்

✒ குஷால்

உடனே என்னை நம் முதலாளி கோவலனிடம் அழைத்துச் செல்லுங்கள். அவர் முன் நான் பதில் சொல்கிறேன் என்றது தாமு.

ராமுவும், சோமுவும் கோவலனிடம் நடந்தவற்றை விளக்கினர். ஆச்சரியமடைந்த கோவலன், தாமுவிடம் நீ ஏன் சிரித்தாய்? ஏன் அழுதாய்? பதில் கூறு என்றான்.



கோவலனும் தாமு ஆடும்

✒ குஷால்





உடனே தாமு "என்னை நீங்கள் உயிர்பலி கொடுத்தவுடன் நான் முக்தி அடைவதை எண்ணி சிரித்தேன். பிறகு என்னைப்போல் ஒரு அப்பாவி பிராணியை உயிர்பலி கொடுத்தால் நீங்கள் அடையும் பாவத்தை நினைத்து அழுதேன்" என்றது.

உடனே தன் தவறை உணர்ந்த கோவலன், உடனே தாமுவிடம் மன்னிப்புக்கோரி, ராமு, சோமுவிடம், "இந்த தாமுவை சுதந்திரமாக காட்டில்விட்டு வாருங்கள்" என்று கூறி மகிழ்ச்சி அடைந்தான்.

Indian Poet: Maithili Sharan Gupt

✒ Chandra B

Rashtra Kavi and a Padma Bhushan awardee, Maithili Sharan Gupt, was one of India's modern Hindi poets.

As a child, like many kids, he did not like to go to school and gave up schooling in between. He was home-tutored in Sanskrit, Bengali, and English. A great devotee of Kabirdas, Maithili started writing poems since then. Born and brought up in Chirgaon, Jhansi in Uttar Pradesh, he entered the world of Hindi literature by publishing his poems first in Indian magazines. His



Indian Poet: Maithili Sharan Gupt

✒ Chandra B



writing style was unique as he wrote in Khari Boli (plain dialect) while most of the others preferred the use of Braj Basha dialect. His works were mostly based on patriotic themes and revolved around the plots of Ramayana, Mahabharata, Buddhist stories and lives of religious figures.

His first poem published by the Indian press was, Rang mein Rang.

His most appreciated work was Bharat-Bharati where he wrote about the freedom struggle. People were greatly inspired by his words. In fact, Gandhiji was so impressed by this that he honoured him with the title Rashtra Kavi.

Another famous work of Maithili Sharan Gupt is Saket, Jayadrath Vadh, Kirano Ka Khel, and Yashodhara, among others.

குழந்தை நத்தையின் வீடு

இந்திரா

Timepass Corner: Spot the Difference (10 Differences)

✒ Gomathy

FIND 10 DIFFERENCES

Know My Name: Sucheta Kriplani

✍ Chandra

After studying and teaching history, Sucheta Kriplani became a central figure in it. She started her career as a professor of Constitutional History at Banaras Hindu University, a school she chose for its hive of anti-colonial activism. In 1936, she married Acharya Kriplani, an influential member of the INC, against their families' and Mahatma Gandhi's wishes.

In 1940, she started the All India Mahila Congress, the women's unit of the INC, which is still active today. She took part in Gandhi's satyagraha marches and led a nonviolent underground movement, for which she was jailed several years in the 1940s.

At the Independence Session of Parliament — the day before India won its official independence in 1947 — Kriplani sang the Independence movement's freedom cry and national anthem, just before Prime Minister Jawaharlal Nehru gave his well-known "Tryst with Destiny" speech.

SUCHETA KRIPLANI

After Independence, Kriplani was one of fifteen women to join the Constituent Assembly and help write the Indian Constitution. She continued to work closely with Mohandas Gandhi, aiding and empowering refugees in the aftermath of the partition riots.

As "a passionate advocate for greater participation of women in politics" (The Better India), Kriplani practiced what she preached. Not only did she help draft the country's constitution, she was also the first woman elected a chief minister in India. She held that office in Uttar Pradesh from 1963-19

Narada Jayanti
27th
May 2021
Thursday / गुरूवार

Lodarwaji Jain Temple: Jaisalmer, Rajasthan, India.

✍ Chandra

Lodarwaji Jain Temple: Jaisalmer, Rajasthan, India.

✍ Chandra

Humour Zone: Laugh! Laugh! Laugh!

✍ Chandra

» Vijay: Do you know why God has given us 2 Ears?
Sujay: Why?
Vijay: To wear a mask!!!

» Ramesh: Do you know who has built this broken castle?
Kumar: It is stillbroken, no one has built it!!!

» Bablu: Do you like English teacher or Maths teacher?
Ranga: Maths teacher!!!
Bablu: Why?
Ranga: Because she frequently takes more leave!!!

» Kavita: Hiw many legs does a goat have?
Murali: One.
Kavita: No, four legs.
Murali: Are all the four legs the same!!!

» Kusal: See there, the Cat bites the Rat and takes it away.
Jeevan: No, it is your mask!!!

» Kusal: See there, the Cat bites the Rat and takes it away.
Jeevan: No, it is your mask!!!

மகான்!

எல்லோர்க்கும் தான் தாத்தா! – மகாத்மா
காந்தி எனும் நம் தாத்தா!
பாலரோடு, இளையோர்க்கும்
மூத்தோர்க்கும் வழிகாட்டி!

இடுப்பில் அரையாடை !
தோளில் ஒரு துண்டு!
படிப்பினையாய் வாழ்ந்தார்!
பாரோர் வியப்புற்றார்!

கை ராட்டையிலே நூல் நூற்று –கீதை
வழியில் தான் நடந்து
கடமையை முடித்திட்டார்
கண்டோம் நாம் விடுதலையை!

கடிகாரம் பார்க்கவில்லை!
துளிகாலம் பிசகவில்லை! – தேச
விடுதலைக்காகத் தன்
வாழ்நாளை அர்ப்பணித்தார்!

உயிர்வாழச் சிறிதுணவு! – மானம்
உடல் மூடத்தான் உடைகள்!
சுயமாய் உழைத்துண்ணும் – வாழ்வே
சொர்க்கம் எனச் சொன்னார்!

உள்ளம் எல்லாம் தூய்மை
உதிர்த்ததெல்லாம் வாய்மை!
அஹிம்சை ஆயுதத்தால் – இவர்
அந்நியரை வென்றுவிட்டார்!

வேற்றுமை எல்லாம் விலக்கி
ஒற்றுமையை இவர் வளர்த்தார்!
கண்கண்ட தெய்வம் இவர் – எனக்
கரம் கூப்பி வணங்கிடுவோம்!

கல்லாமை

அறத்துப்பால் – அதிகாரம் 41 – பாடல் 7

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மாண் புனை பாவையற்று

- திருக்குறள்

நுட்பமான மாண்புடன்
நுழைந்து தெரியும் அறிவினைப்
பெற்றிடாதவன் பேரழகு
பயனில்லாத அழகுதான்

அழகிருந்து பயனில்லை
அறிவு ஒன்றே பெரியது
மண்ணால் செய்த பொம்மை போல
தோன்றும் அழகு தேவையில்லை

மகாத்மா காந்தியின் அறிவுரைகள்

- உடலும் உள்ளமும் தூய்மையாக இருக்கும் அளவைப் பொறுத்துத்தான் உடல் ஆரோக்கியமும் மனவளமும் அதிகரிக்கிறது.
- ஆடம்பரமும் சுதந்திரமும் ஒன்றாகாது. நம் முடைய பொருளாதார நிலவரத்திற்கு ஏற்றபடி தான் வாழ்க்கை நடக்க வேண்டும்.
- அழகு என்பது ஆடையிலும் ஆபரணங்களிலும் காண முடியாது. பணியாற்றுவதில்தான் உண்மையான அழகு பரிணமிக்கிறது.
- இதயம் என்பது அறிவை விட உயர்ந்தது. இதயத்தைப் பண்படுத்தி வளர்ப்பதிலேயே கவனம் செலுத்துங்கள்.
- மன உறுதியைப் பொறுத்துத் தான் உடலின் பலம் அமைகிறது.
- அன்பு உள்ள இடமே அருமையான பள்ளிக்கூடம்.
- தற்பெருமை மறையும்போது ஒழுக்கம் துளிர்விடுகிறது.
- செய்த தவறை ஒப்புக்கொள்வதே தன்மானத்தின் சிகரம்.
- வரவு செலவு கணக்குகளைச் சரியாக எழுதி வைக்கும் பழக்கத்தை மேற்கொள்வாயாக. சிக்கனம் தானே வந்துவிடும்.
- தவறுகள் ஏற்படுவது சகஜம். ஆனால் அதைத் திருத்திக்கொள்ளாமல் இருப்பது பெரும் தவறு!

குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்பு பக்கம்

✍ சம்பத்





குமரன் எனும் சலவைத் தொழிலாளி தன் மனைவி கமலியுடன் ஒரு கிராமத்தில் வசித்தான். அவர்களிடம் சலவை என்ற கழுதையும் இருந்தது. அவர்களுக்கு குழந்தை இல்லாத குறையைத் தவிர மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

தன் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, ஒரு வயதானவர் அவர் மகனை, "ஒரு கழுதையாக இருந்த உன்னை, மகனாக மாற்றினேன்" என பேசியதை கேட்டான் குமரன்.



குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்பு பக்கம்

✍ சம்பத்



அவர்கள் பேசுவதை முழுமையாக கேட்காமல் விரைவாக வீடு திரும்பி தன் மனைவி கமலியிடம், "ஒரு முதியவர், கழுதையை மனிதனாக்கும் வித்தையை அறிந்துள்ளார்" எனக் கூறினான்.

ஆச்சிரயமடைந்த கமலி, குமரனிடம் ஏன் நாம் குழந்தை இல்லாமல் ஏங்க வேண்டும், நம் சலவைக் கழுதையை மகனாக மாற்ற அந்த பெரியவரிடம் செல்வோம் எனக் கூறி சலவையை கூட்டிச் சென்றனர்.



குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்பு பக்கம்

✍ சம்பத்





இவர்களின் முட்டாள் தனத்தை பணம் பண்ண நினைத்த அந்த பெரியவர், "உங்கள் கழுதையை மகனாக மாற்ற ஒரு வருடம் ஆகும் எனக் கூறி பணத்தை பெற்றுக் கொண்டார்". கழுதையையும் வைத்துக்கொண்டார்.

கழு

கழுதையில்லாமல் வருமானமும் குறைந்தது. ஆனால் மகன் வருவான் என நினைத்து அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்தனர் குமரனும், கமலியும்.

குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்பு பக்கம்

✍ சம்பத்





ஒரு வருடமும் கழிந்தது. அந்த பெரியவரிடம் சென்றனர். தெருவில் சென்றுக் கொண்டிருந்த ஒரு இளைஞனை பார்த்து, "அதோ உங்கள் கழுதை, இல்லை இல்லை மகன்" என்று சுட்டிக்காட்டினார் பெரியவர்.

இருவரும் அந்த இளைஞனை நோக்கி ஆரவாரத்துடன், "மகனே வா நம் வீட்டிற்கு செல்லலாம்" என்று கூக்குரலிட்டனர்.

குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்பு பக்கம்

✍ சம்பத்





இதனால் திகைத்த இளைஞன் அவர்களைத் தடுத்தான். ஆனாலும் குமரன் அவனை வற்புறுத்தவே கோவப்பட ஆரம்பித்தான் அந்த இளைஞன்.



உடனே கமலி, குமரனைத் தடுத்து 'வீட்டிற்குச் சென்று சலவைக் கழுதையின் கயிறு, தானியம் ஆகியவற்றை கொண்டு வாருங்கள். நம் ஞாபகம் வரும்" என்றாள்.

குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்பு பக்கம்

✍ சம்பத்



குமரனும் அதை எல்லாம் கொண்டுவந்து, "நீ கழுதையாக இருக்கும்போது உன்னுடையவை இது. ஞாபகம் வருகிறதா?" எனக் கேட்டான்.

சாலையில் நடந்த இந்த சம்பவத்தாள் மக்கள் கூடினர். இளைஞனுக்கு மேலும் கோபம் வந்தது. குமரனை அடிக்க ஆரம்பித்தான்.



குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்பு பக்கம்

✍ சம்பத்



உடனே குமரனும், கமலியும் முதியவரிடம் சென்று முறையிட்டனர். உடனே முதியவரும், "அவன் மறுபடியும் கழுதையாக மாறினால்தான் உங்களை நினைவில் கொள்வான்" என ஏமாற்றினார்.

இதைக் கேட்ட குமரனும், கமலியும், "கோவப்படும் இந்த இளைஞனாக மாறிய கழுதை வேண்டாம், நம் சலவைக் கழுதையாக நமக்கு வேண்டும்" என முடிவு செய்து பெரியவரிடம் கூறினர்.

குமரனும் சலவை கழுதையும்: சிறுவர்களின் சிறப்பு பக்கம்

✍ சம்பத்



கபடதாரியான அந்த பெரியவரும் நமட்டு சிரிபபை உதிர்த்து, இன்னும் இரண்டு நாட்கள் கழித்து வாருங்கள். இந்த இளைஞனை உங்கள் சலவை கழுதையாக மாற்றித் தருகிறேன்" என்றார்.

இரண்டு நாட்கள் கழித்து வந்த தன் சலவை கழுதையை கண்டு மகிழ்ந்தனர். சலவையையே தன் மகன் போல் பாவித்து ஆனந்தமாக வாழ்ந்தனர்.



Owned, Published & Printed by INDIRA SRIVATSA,
Printed at AATHI LAKSHMI GRAPHICS,
14/33, Sivan Koil Cross Street, Kodambakkam, Chennai - 600024 &
Published from E 002, Premier Grihalakshmi Apartments,
Elango Nagar South, Virugambakkam, Chennai - 600092.
EDITOR: INDIRA SRIVATSA

Watercolor artwork of Amer fort
Jaipur, India.

A TO Z INDIA,
ENGLISH & TAMIL MONTHLY MAGAZINE,
PUBLISHED ON THE FIRST WEEK OF EVERY MONTH,
REG. UNDER REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA
UNDER NUMBER TNBIL/2017/75531

The Jantar Mantar monument in Jaipur, Rajasthan, India. Watercolor splash with Hand drawn artwork illustration in vector.